# மேட்டுப்பாளையம் நகராட்சி

20.08.2018ம் தேதி திங்கட்கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசர கூட்டம் நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1. | அரசாணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 19.07.2018 ல் 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% மிகாமலும் , வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட அனுமதிக்கப்பட்டது.<br>இந்நிலையில் அரசு ஆணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை , நாள் 26.07.2018ல் ஏற்கனவே வழங்கப்பட்ட அரசாணையில் உத்தரவிடப்பட்ட வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் 100% மிகாமலும் என்பதை தற்போது 50% மிகாமல் சொத்துவரி உயர்வு செய்திட திருத்திய உத்தரவு வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டுஅரசாணைகளிலும் கீழ்க்கண்டவாறு சொத்துவரியானது 1.4.2018 முதல் சீராய்வு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>சொந்த குடியிருப்புகளுக்கு 50% மிகாமலும் வாடகை குடியிருப்பிற்கு 50% மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% மிகாமலும் உயர்வு செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் மேற்கண்ட அரசாணைகளில் தெரிவித்துள்ளவாறு சொத்துவரியானது 1.4.2018 முதல் வரி சீராய்வு செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : 1. அரசாணை எண் 73, நாள் 19.7.2018 மற்றும் அரசாணை எண் 76 நாள்: 26.7.2018 ன்படி 1.4.2018 முதல் சொத்துவரியினை சொந்தக்குடியிருப்பு மற்றும் வாடகை குடியிருப்புக்கு 50% மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% மிகாமலும் 01.04.2018 முதல் சீராய்வு செய்ய அனுமதிக்கலாம்<br>2. அரசாணைகளை பதிவு செய்யலாம்<br>(ந.க.எண் 2732/2018/அ2)<br>தீர்மானம் எண் : 82<br>தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. |
| 2. | அரசாணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 26.07.2018ல் 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு (Revision 2018) மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 16.08.2018ம் தேதிய சொத்துவரி சீராய்வு தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின்படி சொத்துவரி சீராய்வு தொடர்பாக நாளிதழில் விளம்பர அறிவிப்பு (மாஸ்டர் பதிவேடு) (Master Ledger) தயார் செய்தல் , உரிய சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவங்கள் அச்சடித்தல், நகல் எடுத்தல் மற்றும் சிறப்பு அறிவிக்கை (Special Notice) சொத்துவரி விதிப்புதாரர்களுக்கு கூரியர் மூலம் சார்வு செய்யவும் மற்றும் இதர உத்தேச செலவினம் ரூ. 10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், தற்போது அலுவலகத்திற்கு எழுது பொருட்கள் விநியோகம் செய்யும் ஈரோடு கோ–பிரஸ் அவர்களிடம் வாங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : 1. அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 2732/2018/அ2)<br>தீர்மானம் எண் : 83<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 3. | இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்காக உள்ளூர் மற்றும் வெளியூர் தபால்கள் அனுப்புவதற்காக தபால் தலைகள் நாளது வரை ரூ.2000/–த்திற்கு கொள்முதல் செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தபால் போக்குவரத்து அதிகமாகவும் அவசர அவசியம் கருதி அனுப்பப்பட வேண்டிய நிலையில் அஞ்சல் வில்லை செலவு அதிகரிக்கப்பட்டுள்ளதாலும் ஏற்கனவே வாங்கி வந்த ரூ.2000/–த்திற்கான அஞ்சல் வில்லையுடன் இனி வரும் காலங்களில் ரூ.1000/–ம் கூடுதலாக மொத்தம் ரூ.3000/–த்திற்கு வழங்க அனுமதி வேண்டி தனி அலுவலரின் ஒப்புதலுக்காக சமர்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2972/2018/அ4)<br>தீர்மானம் எண் : 84<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது. |
| 4. | இந்நகராட்சிக்கு சொந்தமான வணிகவளாக கடைகளுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தினத்தந்தி நாளிதழ் கோவையிடம் இருந்து விளம்பரக் கட்டணம் ரூ.53642/–க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>மேற்படி பட்டியலில் உள்ள தொகை ரூ. 53642/– தினத்தந்தி நாளிதழ் கோவைக்கு செலுத்த தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.780/2016/அ1)<br>தீர்மானம் எண் : 85<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது. |
| 5. | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 38 Z–4571க்கு பேட்டரி வினியோகம் செய்வதற்கு கடந்த 14.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br>1. திருவாளர் ரமேஷ் ஏஜென்சீஸ் மேட்டுப்பாளையம் – ரூ.9750/–<br>2. திருவாளர் ரிஷாப் என்டர்பிரைசஸ் மேட்டுப்பாளையம் – ரூ. 9900/–<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்புந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ரமேஷ் ஏஜென்சீஸ் மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.2832/2018/எச்2)<br>தீர்மானம் எண் : 86<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது. |

## மேட்டுப்பாளையம் நகராட்சி

23.08.2018ம் தேதி வியாழன் கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

1. மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண் 22866/2018/P3, நாள்: 20.08.2018 ல் ரூ.143.70 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. அதன் படி கீழ்காணும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்து உரிய நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கட்கு சமர்ப்பிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண் 23 முத்தமிழ்நகர் பகுதியில் நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் | – | 55.30 |
| 2. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் மற்றும் தார்சாலை, சுற்றுச்சுவர் அமைத்தல் | – | 66.80 |
| 3. | திடக்கழிவு மேலாண்மைக்கு மின்சாரம் மூலம் இயங்கும் வாகனம் 12 எண்ணிக்கை வாங்குதல் | – | 21.60 |
| | மொத்தம் | | 143.70 |

மேற்காணும் பணிகளுக்கான மொத்த மதிப்பீடு 143.70 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண் 22866/ P3, நாள்: 20.08.2018ல்

மத்திய அரசின் மானியம் 35%

மாநில அரசின் மானியம் 55%.

நகராட்சி பங்களிப்பு தொகை 10%. என நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண் 1845/2018/இ1

தீர்மானம் எண் : 87
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 2. | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.26458/2016/தி1 நாள்.29.05.2017 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1897/2017/பி3 நாள்.16.10.2017ன்படி மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு 8 பரப்புரையாளர்கள் மற்றும் 2 மேற்பார்வையாளர்களும் பொது மக்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு நியமித்து உத்திரவிடப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.<br><br>மேலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்26458–1/2016/தி1 நாள்31.07.2018ன்படி மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலத்தினை 01.09.2018 முதல் 30.11.2018 வரை ஒப்பந்தப்புள்ளி விதிப்படி மேலும் மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிடவும், அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணியாளர்களுக்கு 3 மாத காலத்திற்கு ஊதியம் வழங்க ஆகும் செலவினத் தொகை ரூ.4,10,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 682/2017/எச்1<br><br>தீர்மானம் எண் : 88<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது. |
| 3. | இந்நகராட்சியின் 2017–2018ம் ஆண்டுக் கணக்கு தயார் செய்து Data Entry செய்து ஆண்டுக் கணக்கு முடித்து தணிக்கைக்கு சமர்ப்பிக்கவும். அதற்கான செலவு தொகை ரூ.50,000/– மேற்கொள்ளவும் ஏற்கனவே இப்பணியை செய்து வரும் திருமதி. எஸ். தாமரை செல்வி, கன்சல்டன்ட் அவர்களுக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 3560/2018/பி1<br><br>தீர்மானம் எண் : 89<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது. |
| 4. | இந்நகராட்சியில் 20 வருடங்களுக்கு மேல் பணியாற்றி வரும் வருவாய் உதவியாளர்களான திரு.ம.ராஜன், திரு.ஆ.முரளிதரன் ஆகியோர்க்கு (சிறப்பு) Renue Inspector தரம் உயர்த்தி பதவி உயர்வு வழங்க அரசாணை (இருபதாண்டு) எண் 61 நாள்.27.07.2018 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை) உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>ந.க.எண் 2848/2018/சி1<br><br>தீர்மானம் எண் : 90<br>தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது. |

| | |
|---|---|
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் நகரில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகரில் அவ்வப்போது ஏற்படும் பம்பில் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்கள் உடைப்பு சரிசெய்யவும். அதற்கு தேவையான உதிரிச் சாமான்கள் விநியோகம் செய்யவும் பொதுக்குழாய், பொதுக்கழிப்பிடங்களுக்குத் தேவையான உதிரிச்சாமன்கள் விநியோகம் செய்யவும் ஆகும் உத்தேச செலவீனம் ரூ.2,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கவும், பம்பிங் மெயின் பகிர்மானக்குழாய் உடைப்பு சரிசெய்வது அவசியமாவதால், குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>தீர்மானம் எண் : 91<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது. |
| 6. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றும் செய்யப்படும் குடிநீர் கே.கே.நகர் மேல்நிலைத் தொட்டிக்கு நிரப்ப 15HP மோனோ பிளாக் மோட்டார் பம்பு செட் பயன்படுத்தப்பட்டு வருகிறது கடந்த 09.07.2018 அன்று இயங்கிக் கொண்டிருந்த போது அதிக இரைச்சலுடன் நின்றுவிட்டது. பம்பை பிரித்து பார்த்த போது பம்பின் பேரிங்குகள் உடைந்து இருந்தது தெரியவந்தது. இரண்டு மோட்டார் பம்புகளும் பழுதானதால் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டது. ஆதலால் பழுதான இரண்டு பம்புகளையும் சரிசெய்ய ஆகும் செலவினம் ரூ.31,100/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>பங்களா மேடு நீரேற்று நிலையத்தில் இருந்து காரமடைஇந்திய அரசு அச்சகம் (Press Colony) நீரேற்றம் செய்யும் 30HP சென்ட்ரிபியூகல் மோட்டார் பம்பு கடந்த 15.08.2018 அன்று இயங்கிக் கொண்டிருந்த போது அதிக இரைச்சலுடன் நின்றுவிட்டது. பின்னர் பம்பை பிரித்துப் பார்த்த போது பம்பின் ஷாப்டுகள் தேய்ந்தும் புஸ்கள் பேரிங்குகள் உடைந்து இருந்தது தெரியவந்தது. இரண்டு பம்பு செட் உள்ள இடத்தில் ஒன்று பழுதானதால் மற்றொன்று தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளது. அதிலும் எதாவது பழுது ஏற்பட்டால் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படும். ஆகையால் பழுதான பம்பில் ஷாப்டு, புஸ்கள் பேரிங்குகள், சிலீவ்கள் மற்றும் டேப்பர் ஆகியவை மாற்றி இயக்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 36,000/— மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து கூட்டு குடிநீர்த் திட்டம் மூலம் (Combined Scheme) நீரேற்றம் செய்ப்பபடும் குடிநீர் பங்களாமேடு சேமிப்பு தொட்டியில் சேகரிக்கப்பட்டு அதிலிருந்து 35HP நீர் மூழ்கி மோட்டார் மூலம் மேல்நிலை நிரப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. 35HP மூழ்கி மோட்டாரின் காலம் பைப் (CI) ஒன்று பழுதாகி உடைந்ததால் நீரேற்றம் செய்ய இயலவில்லை. ஆகையால் பழுதான கலம் பைப்பை அகற்றிவிட்டு புதிதாக பைப் மாற்ற ஆகும் செலவினம் ரூ.14,500/— மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான பேக்கள் ரோப், காண்டாக்ட் செட், மின் உதிரிபாகங்கள் CID ஜாயுண்டுகள் , போல்டு நட்டுகள் மற்றும் ஸ்பின்டில் ராடு மற்றும் செக்நட் , பழுதான ராடுகள் சரிசெய்து இயக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,18,500/— மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பழுதான பம்புகள் மற்றும் உதிரிச்சாமான்கள் வாங்க ஆகும் செலவினத்திற்கு குடிநீர் அவசர அவசியம் கருதி அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>தீர்மானம் எண் : 92<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 7. | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பவானி ஆற்றில் கேரளாவில் பெய்த மழையின் காரணமாக பில்லூர் டேம் நிரம்பி வழிவதால் தண்ணீர் அதிகமாக ஆற்றில் வெளியேறுவதால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் உத்தரவின்படி ஆட்டோ விளம்பரம் செய்ய ஏழு நாட்களுக்கு பகல் மற்றும் இரவு நேரங்களில் ஆகும் செலவினம் ரூ. 21,000/–க்கு நகராட்சிகளின் சட்டம் 1920 ன்படி பிரிவு – 15–ல் பணி மேற்கொண்டதை மன்றத்தின் அனுமதி பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்<br>ந.க.எண் 2239/2018/இ1<br><br>தீர்மானம் எண் : 93<br>தீர்மானம் : பதிவுசெய்யப்பட்டது. |
| 8. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மூன்று குடிநீர் திட்டங்களில் குடிநீரில் உள்ள கிருமிகளை அழிக்க குளோரின் வாயு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கேரளாவில் பெய்த அடை மழையால் பவானி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஆற்றில் குடிநீரில் செம்மண் கலந்து வருவதால் கூடுதலாக குளோரின்வாயு தேவைப்படுவதால் கையிருப்பில் குறைவாக உள்ளதால் கூடுதலாக மூன்று சிலிண்டர்களின் குளோரின்வாயு நிரப்ப ஆகும் செலவினம் ரூ.70,000/–க்கு குடிநீர் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920ன்படி பிரிவு –15 (Section –15) பணிமேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்<br>ந.க.எண் 2209/2018/இ1<br><br>தீர்மானம் எண் : 94<br>தீர்மானம் : பதிவுசெய்யப்பட்டது. |